## 1.1 பாதகமான அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியின் (“வங்கி”) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து வங்கி 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தரவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நான் பாதகமான அபிப்பிராயத்தினை வெளிப்படுத்தியுள்ளேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, வங்கி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது வங்கி கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

வங்கி நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் வங்கியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு வங்கி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு வங்கிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல்.

பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- வங்கியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- வங்கியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் வங்கி இணங்கியிருந்ததா என்பதும்,

- வங்கி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வங்கியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| **குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் - எஸ்எல்எப்ஆர்எஸ் 9, நிதிசார் கருவிகள் 2018 ஜனவரி 01 இல் அல்லது அதற்குப்பின் தொடங்கும் நிதி அறிக்கையிடல் காலத்திற்கு பொருந்தும். இருப்பினும், லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியின் நிதிக்கூற்றுக்கள் எஸ்எல்எப்ஆர்எஸ் 9 | பிரதேச அபிவிருத்தி வங்கியினால் கையகப்படுத்திய பிறகு ஏற்கனவே பிரச்சனை திருத்தப்பட்டது. | பொருந்தக்கூடிய தரங்களுக்கு ஏற்ப நிதி அறிக்கைகளை தயாரிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |

இற்கு இணங்க தயாரிக்கப்படவில்லை. எனவே, நிதிக்கூற்றுக்களில் மேற்குறிப்பிட்ட நியமத்தின் தாக்கம் மதிப்பிட முடியவில்லை.

### 1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இல.3.7.1 இன் படி, வரையறுக்கப்பட்ட நன்மை மதிப்பீட்டினை தீர்மானிப்பதற்கு ஒவ்வொரு 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒரு தகுதிவாய்ந்த நிபுணத்துவ சேவை பெறப்படுகிறது. இருப்பினும், 2015 ஆம் ஆண்டிலிருந்து நிபுணத்துவ மதிப்பீடு செய்யப் பட்டிருக்கப்படவில்லை. | ஒப்பக்கொள்கிறேன் மற்றும் இது 2019 இல் பிரதேச அபிவிருத்தி வங்கியினால் கையகப் படுத்தியதுடன் திருத்தப்படும். | கணக்கியல் கொள்கைகளை தொடர்ந்து பயன்படுத்துவதன் மூலம் நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதற்குரிய தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 திசெம்பர் 31 இல் இலங்கை மத்திய வங்கியின் (சிபிஎஸ்எல்) விற்கும் விலையான ரூபா. 184.6966 இனை பயன்படுத்துவதற்கு பதிலாக இலங்கை மத்திய வங்கியின் (சிபிஎஸ்எல்) வாங்கும் விலையான ரூபா. 180.72 பயன்படுத்தி ஒரு கடன் மீதி அமெரிக்க டொலர் (USD) 16,407,693 மற்றும் செலுத்த வேண்டிய வட்டி அமெரிக்க டொலர் (USD) 20,509.66 இலங்கை ரூபாவிற்கு (LKR) மாற்றப்பட்டுள்ளது. எனவே, 2018 திசெம்பர் 31 இல் செலுத்த வேண்டிய கடன் மீதி மற்றும் வட்டி செலவினம் ரூபா. 65,328,390 ஆல் குறைக்கப்பட்டுள்ளது. | 2019 யூலை 29 இல் கணக்காய்வு சரி செய்யப்பட்டதுடன் தொடர்புடைய பிரச்சனை திருத்தப்பட்டது. | வெளிநாட்டு நாணயங்களில் குறித்துரைக்கப் பட்டுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், பொருத்தமான வீதங்களை பயன்படுத்தி மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |
| (ii) | வாடிக்கையாளர்களால் மேற்கொள்ளபடபட்டு இனங்காணப்படாத வைப்புக்களான | கணக்குகளை இணக்கப்பாடு செய்வதற்கும் மற்றும் இனங்காணப்படாத | நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரிப்பதற்கு தேவையான |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா. 1,484,470 தொகையானது கணக்கிடப்படவில்லை. இருந்தபோதும், 31 திசெம்பர் 2018 இல் இந்த மீதிகள் வங்கி கூற்றில் காணப்பட்டது. | வைப்புக்களை நீக்குவதற்கும் ஏற்கனவே கிளைகளுக்கு அறிவிக்கப்பட்டது. | நடவடிக்கைகளை எடுக்கவும். |
| (iii) | 31 திசெம்பர் 2018 இல் தலைமை அலுவலகத்தின் கொள்வனவுகள், காகிதாதிகள் மற்றும் மேம்படுத்தல் உருப்படிகள் மீதான பௌதீக ரீதியாக சரிபார்க்கப்பட்டு பதிந்த மீதிகளுக்கும் பொதுப்பேரேட்டு மீதிகளுக்கும் இடையிலான வேறுபாடாக ரூபா. 6,895,607 அவதானிக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பான வேறுபாட்டை இணக்கப்பாடு செய்வதற்கு கவனம் அளிக்கப்பட்டது. | பௌதீக ரீதியாக பதிந்த மீதிகளுக்கும் பொதுப்பேரேட்டு மீதிகளுக்கும் இடையிலான எந்தவொரு வேறுபாட்டையும் இணக்கப்பாடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |
| (iv) | நிதிக்கூற்றுக்களில் காசு அடிப்படையில் வாகனத்தின் குத்தகை வட்டி வருமானம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. | பொருத்தமான கணணி முறைமை கிடைக்கப்பெறாமை காரணமாக பரிவர்த்தனைகள் கைமுறையாக பதிவு செய்யப்பட்டுள்ளது மற்றும் எதிர்கால குத்தகை பரிவர்த்தனைகளான இது திருத்தப்படும். | குத்தகை வட்டி வருமானத்தை அட்டுறு அடிப்படையில் அங்கீகரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |
| (v) | நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இல.18 இன் படி, கணணி மென்பொருளின் பெறுமானத்தேய்வு ஏற்பாடு ரூபா. 30,377,146 ஆகும். இது ஆண்டு தொடக்கத்தின் கிரயத்திற்கு வெறுமனே சமம். இருப்பினும், நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இல.19.2 இன் படி, முழுமையாக ஏற்பாடு செய்யப்பட்ட கணணி மென்பொருள் ரூபா. 1,066,448 மட்டும் மற்றும் இந்த குறிப்புக்கள் ஒன்றிற்கொன்று முரண்படுகின்றன. | நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இல.19.2, முழுமையாக ஏற்பாடு செய்யப்பட்ட கணணி வன்பொருள் சொத்துக்கள் ரூபா. 78,103,241 ஆக குறிப்பிட்டுள்ளது. மற்றும் இதில் முழுமையாக ஏற்பாடு செய்யப்பட்ட கணணி மென்பொருள் ரூபா. 23,741,136 உள்ளடக்கப்பட்டுள்ளது இருப்பினும், முழுமையாக ஏற்பாடு செய்யப்பட்ட கணணி மென்பொருள் ரூபா. 1,066,448 ஆக நாங்கள் குறிப்பிட்டுள்ளோம். எனவே, | நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |

| | | |
|---|---|---|
| | ரூபா. 24,807,584 முழுமையாக ஏற்பாடு செய்யப்பட்ட மென்பொருளின் மொத்த கிரயமாக இருக்க வேண்டும். | |

**1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவேடுகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) 2018 திசெம்பர் 31 இல் நீக்கும் கட்டுப்பாட்டுக்கணக்கில் உள்ள ரூபா. 20,108,614 நிலுவை நீக்கப்படவில்லை. | 2018 திசெம்பர் 31 இற்கு பிறகு தொடர்புடைய நிலுவை நீக்கப்பட்டது. மற்றும் 2019 செப்ரெம்பர் 30 இல் ரூபா. 1,873,526 நிலுவையாக அறிக்கையிடப் பட்டிருந்தது. | இந்த கட்டுப்பாட்டக் கணக்குகளை எந்த தாமதமும் இன்றி நீக்குவதற்கும் மற்றும் நிதிக்கூற்றுக்களை சரியாக செய்யவும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |
| (ii) 2018 திசெம்பர் 31 இல் அடையாளம் காணப்படாமல் இருக்கின்ற இனங்காணப்படாத வாடிக்கையாளர் வைப்புக்கள் கணக்கில் ரூபா. 4,932,495 செலவு மீதியாக பேணப்படுகின்றது. | 2019 யூலை 31 இல் தொடர்புடைய நிலுவை ரூபா. 4,522,653 வரை நீக்கப்பட்டுள்ளது. | இந்த இனங்காணப்படாத வாடிக்கையாளர் வைப்புக்களை எந்த தாமதமும் இன்றி நீக்குவதற்கும் மற்றும் நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |

**1.5.5 தொங்கல் கணக்குகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடன்கொடுத்தோர் தொங்கல் கணக்குகள் மற்றும் கடன்பட்டோர் தொங்கல் கணக்குகள் ஆக இரண்டு தனித்தனி கணக்குகளை இயக்காமல், வங்கி ஒரு தொங்கல் கணக்கினை மட்டுமே பராமரிக்கின்றது. மேற்கூறிய தொங்கல் கணக்கில் செலவு மீதியாக ரூபா. 13,598,183 பேணப்படுகின்றது. மற்றும் இது 2018 திசெம்பர் 31 இல் | சிறிய மற்றும் நடுத்தர வணிகம் (SME) வங்கியுடனான இணைவு காரணமாக பிரச்சினையொன்று எழுந்துள்ளது. மற்றும் இது பிரதேச அபிவிருத்தி வங்கியின் | நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |

| | | |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் ஏனைய சொத்துக்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. மேற்கூறிய செலவு மீதி காரணமாக ரூபா. 13,598,183 ஆல் சொத்துக்களில் குறைவும் மற்றும் பொறுப்புக்களில் குறைவும் அவதானிக்கப்பட்டது. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குழு கூட்டத்தில் முன்மொழியப்பட்டது. | |

### 1.5.6 பொருத்தமற்ற பெறுமதி கணிப்பீடு அல்லது மதிப்பீடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) 2018 ஆம் ஆண்டுக்கான வருமானகூற்றில் வருமான வரிச்செலவாக ரூபா. 69,692,025 காட்டப்பட்டுள்ளது. மேற்கூறிய தொகையின் கணிப்பீடு கணக்காய்வு செய்ய கிடைக்கக்கூடியதாகவில்லை. | 2018 ஆம் ஆண்டுக்கான இறுதி கொடுப்பனவுடன், தொடர்புடைய நிலை திருத்தப்படும். | பொருந்தக்கூடிய விதிமுறைகளுக்கு இணங்க வரி கணிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |
| (ii) ஆண்டுக்கான இலாப குறைவும் மற்றும் நிதிச்சேவைகளுக்கான செலவுகளின் வற் அதிகரிப்பும் ரூபா. 4,772,824 ஆல் அவதானிக்கப்பட்டது. மேலும், 2018 திசெம்பர் 31 இல் செலுத்த வேண்டிய வற் மீதி ரூபா. 4,346,948 ஆல் அதிகரித்து காணப்பட்டது. | 2019 யூலை 29 இல் கணக்காய்வு சரி செய்யப்பட்டதுடன் தொடர்புடைய பிரச்சனை திருத்தப்பட்டது. | பொருந்தக்கூடிய விதிமுறைகளுக்கு இணங்க வரி கணிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |

### 1.5.7 வங்கியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இல.2.7.ii இன் படி, குழு வங்கி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தது. மற்றும் மேற்கூறிய அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டது. இருப்பினும், பிரதேச அபிவிருத்தி வங்கி லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியின் 100 சதவீத பங்கு | இது அரசாங்கத்தின் முடிவு மற்றும் 2019 பெப்ரவரி 7 இல் நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்த பின்னர் வங்கி முறையாக அறிவித்தது. | 2018 திசெம்பர் 31 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியின் உரிமை மாற்றம் நடைபெற்றிருந்தது. எனவே, பொருத்தமான வெளிப்படுத்துகைக |

| | | |
|---|---|---|
| மூலதனத்தினை 2016 ஆம் ஆண்டில் அரசாங்க பாதீட்டு முன்மொழிவுக்கு ஏற்ப கையகப்படுத்தியது. இதன் மூலம் லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் இணைக்க முன்மொழியப்பட்டது. மற்றும், இந்த விடயம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | | ளுடன் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

### 1.5.8 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் சிறிய மற்றும் நடுத்தர வணிக (SME) கடன் கொடுத்தோர் கணக்கில் நிலுவையாக ரூபா. 1,432,019 2012 ஆம் ஆண்டிலிருந்து மீட்டெடுக்கப்படாமல் காணப்பட்டது. மேலும், எந்தவொரு ஆதார ஆவணமும் கணக்காய்வு செய்ய கிடைக்கவில்லை. | சிறிய மற்றும் நடுத்தர வணிகம் (SME) வங்கியுடனான இணைவு காரணமாக பிரச்சினையொன்று எழுந்துள்ளது. மற்றும் இது பிரதேச அபிவிருத்தி வங்கியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குழு கூட்டத்தில் முன்மொழியப்பட்டது. | எந்த தாமதமும் இன்றி நிலுவைகளை மீட்டெடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா. 227.8 மில்லியன் தொகையான இலாபம் ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா. 298.2 மில்லியன் தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா. 70.4 மில்லியன் தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. வட்டி வருமானத்தின் குறைவு, நிதிசார் சொத்துக்களின் நட்டக்கழிவு படி அதிகரிப்பு மற்றும் ஏனைய தொடர்புடைய செலவுகள் அதிகரிப்பு என்பன வீழ்ச்சிக்கான பிரதான காரணங்களாகும்.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வட்டி வருமானம் ரூபா. 85.8 மில்லியன் அல்லது 10 சதவீதத்தினால் குறைக்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது கடன்கள் மற்றும் முற்பணங்களிலிருந்தான வட்டி வருமானம் ரூபா. 93.7 மில்லியன் அல்லது 32.9 சதவீதத்தினால் குறைந்திருந்தது மேற்கூறிய வீழ்ச்சிக்கான பிரதான காரணங்களாகும். 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது வட்டி செலவினம் ரூபா. 12.3 மில்லியன் அல்லது 16.6 சதவீதத்தினால் குறைக்கப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது வாடிக்கையாளர் வைப்புக்கள் ரூபா. 77.7 மில்லியன் அல்லது 19.3 சதவீதத்தினால் குறைவடைந்தமை மேற்கூறிய வீழ்ச்சிக்கு தாக்கத்தை ஏற்படுத்தியது. வெளிநாட்டு நாணய மீள்மதிப்பீட்டின் இலாபம் காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ஏனைய செயற்பாட்டு வருமானம் ரூபா. 130.6 மில்லியன் அல்லது 730 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

துறை ரீதியான விகிதங்களுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் வங்கியினுடைய முக்கியமான சில கணக்கீட்டு விகிதங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

அ) சராசரியாக உரிமம் பெற்ற சிறப்பு வாய்ந்த வங்கி (LSB) இனுடைய விகிதங்களான 3.25 சதவீதம் மற்றும் 3.82 சதவீதம் ஆகியவற்றுடன் ஒப்பிடுகையில் முறையே உயர்ந்த தேறிய வட்டி எல்லை 7.68 சதவீதம் மற்றும் தேறிய இலாப வீதம் 25.36 சதவீதம் மீளாய்வாண்டில் அறிக்கையிடப்பட்டுள்ளது.

ஆ) சராசரியாக உரிமம் பெற்ற சிறப்பு வாய்ந்த வங்கியினுடைய விகிதமான 7.12 சதவீதுடன் ஒப்பிடுகையில் ஈடுபடுத்திய மூலதனம் மீதான திரும்பல் 4.23 சதவீதம் மீளாய்வாண்டில் அறிக்கையிடப்பட்டுள்ளது.

இ) 2018 திசெம்பர் 31 இல் 46.5 சதவீதம் உயர்ந்த அளவிலான செயற்பாடற்ற கடன் (என்பிஎல்) விகிதமாக அவதானிக்கப்பட்டிருந்தது. இது சராசரியாக உரிமம் பெற்ற சிறப்பு வாய்ந்த வங்கியினுடைய விகிதமான 4.8 சதவீதத்தை விட அதிகமாக உள்ளது.

ஈ) 2018 திசெம்பர் 31 இல் வங்கியினுடைய மொத்த மூலதனத்தின் போதுமான தன்மை விகிதம் 95.76 சதவீதம் ஆகும். இது 11.875 சதவீதமான குறைந்தபட்ச தேவையை விட மிக அதிகமாக உள்ளது.

உ) 2018 திசெம்பர் 31 இல் வங்கியினுடைய திரவ சொத்து விகிதம், குறைந்தபட்ச தேவைப்பாடான 20 சதவீதத்துடன் ஒப்பிடும் போது மேலும் 1,864.37 சதவீதத்தால் அதிகரித்து உள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 மார்ச் 31 இல் உள்ளக கணக்காய்வு பிரிவால் பிரதேச அபிவிருத்தி வங்கியின் நாவல வளாகத்தில் நடாத்தப்பட்ட பௌதீக ரீதியாக சரிபார்ப்பின் படி, | | பௌதீக ரீதியாக பதிந்த மீதிகளுடன் பொதுப்பேரேட்டு மீதிகளை இணக்கப்பாடு செய்வதற்கும் மற்றும் தொடர்புடைய கட்சிகளிடமிருந்து நட்டத்தினை அறவிடுவதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |
| (அ) இருப்புக்களின் கிரயம் ரூபா. 6,304,959 மற்றும் தேறிய புத்தக பெறுமதி ரூபா. 788,043 ஆகியன கிடைக்ககூடியதாகவில்லை | பௌதீக ரீதியான இருப்புக்களுடன் வேறுபாடுகளை இணக்கப்பாடு செய்வதற்கு விரிவான | |

| | | |
|---|---|---|
| என்பது அவதானிக்கப்பட்டது. | சரிபார்த்தல் நடாத்தப்படுகின்றன. | |
| (ஆ) 2015 மற்றும் 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரூபா. 779,689 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட மூன்று மணிக்கணணிகள், ஒரு ஐ பாட் மற்றும் இரண்டு ஐ போன்கள் ஆகியவை முன்னாள் தலைவர் மற்றும் வேலை செய்யும் இயக்குனர் ஆகியவர்களினால் திருப்பி செலுத்தப்படவில்லை. | முன்னாள் தலைவர் மற்றும் வேலை செய்யும் இயக்குனர் ஆகியவர்களினால் உபகரணங்கள் திருப்பி செலுத்தப் படவில்லை மற்றும் குறித்த விடயம் முறையான முறையில் கையாளப்பட வேண்டும். | |

## 3.2 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆண்டுக் காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கியின் வாங்கும் நாணய மாற்று வீதத்தை பயன்படுத்தி இலங்கை அரசின் அமெரிக்க டொலர் (GOSLUSD) கடனுக்கான மூலதனம் மற்றும் வட்டி தவணைக்கட்டணமாக மொத்தம் ரூபா. 109,395,497 திறைசேரிக்கு கொடுக்கப்பட்டிருந்தது. இருப்பினும், மேலே கூறப்பட்ட கடன் தவணைக்கட்டணமானது இலங்கை மத்திய வங்கியின் விற்கும் வீதத்தை பயன்படுத்தி மாற்றப்பட்டிருக்க வேண்டும். எனவே, 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் செலுத்திய கடன் தவணைக்கட்டணமானது ரூபா. 2,470,413 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | எதிர்கால கொடுப்பனவுகளை செய்யும் போது இது கவனத்தில் எடுக்கப்படும் மற்றும் டொலர் பெறுமதியான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்காக இலங்கை மத்திய வங்கியின் சராசரி டொலர் வீதத்தை பயன்படுத்துவது லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியின் கொள்கை ஆகும். | பொருத்தமான வீதத்தை பயன்படுத்தி இலங்கை அரசின் அமெரிக்க டொலர் (GOSL USD) கடனை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளினை எடுக்கவும். |

## 3.3 குறைப்பயன்பாடுடைய நிதியங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) வங்கி வாடிக்கையாளர்களுக்கு கடன்களை வழங்காமல், இடர் இல்லாத வட்டி வீதத்தில் நிலையான வைப்பில் பெருமளவு பணத்தினை முதலீடுகள் செய்யப்பட்டுள்ளது. இது வங்கியின் முதன்மை நோக்கமான கைத்தொழில், | வங்கி அதனது முதன்மை நோக்கத்தை அடைவதற்காக கடன்களை வழங்கியுள்ளது. மற்றும் வங்கியுடைய செயற்பாடற்ற கடன்களை கட்டுப் படுத்துவதற்காக | வங்கியின் முதன்மை நோக்கத்தை அடைவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |

| | | | |
|---|---|---|---|
| | விவசாயம், வர்த்தகம், கட்டுமானம் மற்றும் ஏனைய நிறுவனங்களின் மேம்படுத்தல், ஸ்தாபித்தல், விரிவாக்கல், நவீன மயமாக்கல் மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றிற்கு உதவுதல் என்பதுடன் முரண்படுகின்றது. | முதலீடுகள் நிலையான வைப்பில் செய்யப்பட்டுள்ளது. | |
| (ii) | 2013 ஒக்டோபர் 9 இல் அபிவிருத்தி நிதி திணைக்களத்தில் பிரதேச அபிவிருத்தி வங்கி மற்றும் லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியின் பொது முகாமையாளர்களுடன் நடைபெற்ற கூட்டத்தில், ரூபா. 200 மில்லியன் அரசாங்கத்தால் லங்காபுத்ர அபிவிருத்தி வங்கிக்கு உத்தரவாத நிதியாக வழங்கப்பட்டிருந்தது. | | கூட்டங்களில் ஒப்புக்கொண்ட தீர்மானங்களை அமுல் படுத்துவதற்கும் மற்றும் ஏதாவது பொறுப்புக்கள் திறைசேரியில் எஞ்சியிருந்தால் தீர்க்கவும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |
| (a) | கூட்ட அறிக்கையின் நிபந்தனை இல.02 இன் படி, பிரதேச அபிவிருத்தி வங்கியில் ஆண்டுக்கு 7 சதவீதம் எனும் வீதத்தில் ரூபா. 200 மில்லியன் முதலிடப்பட வேண்டும். இருப்பினும், ரூபா. 100 மில்லியன் மட்டுமே பிரதேச அபிவிருத்தி வங்கியில் முதலிடப்பட்டுள்ளது. மற்றும் மீதி ரூபா. 100 மில்லியன் லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியால் ஏனைய வணிக வங்கிகளில் முதலிடப்பட்டுள்ளது. | உத்தரவாத நிதி திட்டத்தை அமுல்படுத்துவதற்கு எந்தவொரு எழுத்து மூல ஒப்பந்தமும் இல்லை. இருப்பினும், கூட்டத்தில் உடன்பட்டதன் படி, ரூபா. 100 மில்லியன் பிரதேச அபிவிருத்தி வங்கியில் முதலிடப்பட்டுள்ளது. | |
| (b) | மேலும், ஒவ்வொரு ஆண்டும், வருடாந்த வட்டி வருமானத்தில் 50 சதவீதம் நிதியத்துடன் இணைக்கப்பட வேண்டும். இருப்பினும், வருடாந்த வட்டி வருமானம் 2016 ஆம் ஆண்டிற்கு பின் நிதியத்திற்கு மாற்றப்படவில்லை. | பிரதேச அபிவிருத்தி வங்கியினால் கையகப்படுத்திய பின் திருத்தப்பட்டது. | |
| (c) | 2018 இல் பிரதேச அபிவிருத்தி வங்கியினால் இந்த திட்டத்தின் | ஒப்புக்கொள்கின்றேன். | |

| | | | |
|---|---|---|---|
| | கீழ் வழங்கப்பட்ட எல்லா கடன்களும் மீட்டெடுக்கப்பட்டன. இருப்பினும், மேற்கூறிய நிதியை திருப்பி செலுத்துதல் அல்லது சுழலும் நிதியாக தொடர்வது தொடர்பாக எந்தவொரு கணக்காய்வு சான்றும் கணக்காய்விற்கு கிடைக்கக்கூடியதாகவில்லை. | | |
| (iii) | 2009 நவம்பர் 12 இல மகாவலி கடன் திட்டத்தின் பிரிவு III இனை தொடர்வதற்காக மகாவலி அதிகார சபையால் லங்காபுத்ர அபிவிருத்தி வங்கிக்கு ரூபா. 50 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் பிரிவு 2 இன் ‘அ’ மற்றும் ‘ஆ’ இன் படி, லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி கடனை கருணைக்காலம் ஒரு வருடம் உள்ளடங்கலாக, 4 சதவீத ஆண்டு வட்டியில் 5 வருடத்திற்குள் 4 ஆண்டு தவணைக்கட்டணங்கள் என்றவாறு செலுத்த வேண்டும். இருப்பினும், வங்கி அந்த விதிமுறைகளை பின்பற்றவில்லை மற்றும் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத்தொகை 9 ஆண்டுகளுக்கும் மேலாக நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்றது. | 2018 திசெம்பர் 31 இல் மொத்த பொறுப்புக்களாக ரூபா. 68,196,761 கணக்கிட்டுள்ளது. மற்றும் மேற்கூறிய நிலுவையை மகாவலி அதிகார சபை உறுதி செய்துள்ளது. மேலும், இந்த நிதி, வங்கியால் உயர்ந்த வீதத்தில் முதலிடப்பட்டுள்ளது. | கொடுக்க வேண்டிய நிலுவைகளை தீர்த்த பின் செயற்பாட்டில் இல்லாத திட்டங்களை மூடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |